**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 04 October–December 2024**

# மூன்றாம் உலகப்போர் நாவலாசிரியரின் படைப்பாளுமை

**முனைவர் ம.இராஜகுமாரி,**
உதவிப்பேராசிரியர் (முதுநிலை),
தமிழ்த்துறை,
சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி – 620002,

காலந்தோறும் ஆற்றங்கரையோரங்கள் மனிதவாழ்வில் பல வளர்ச்சி நிலைகள் சார்ந்த பயிற்றுணர்வுகளைக் கற்றுத்தந்திருக்கின்றன. மனித நாகரிகத்தின் தொட்டிலே ஆறுகளும், அதனை ஒட்டிய நிலப்பரப்புகளுமே என்பதனை ஆய்வாளர்கள் உடன்படவே செய்கின்றனர். இடம்பெயர்ந்து நிலையில்லா வாழ்வு வாழ்ந்த மனிதனை மீட்டெடுத்து இருத்தல் எனும் மிக உன்னதமான நிலைக்கு உய்வித்தது நிலப்பரப்புகளில் மனிதன் மேற்கொண்ட உழவும் தொழிலுமே ஆகும். அங்ஙனமாகிய தன்னைச் சார்ந்த நிலப்பரப்பு மற்றும் சூழலியலோடு பின்னிப்பிணைந்து வாழ்ந்தவற்றுள் மனிதன் மட்டுமல்லாது உயிரினத் தொகுதிகளும் அடங்கும். நம்மை வாழ்விக்கும் சூழலைக் காத்து மேம்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு ஆட்படக்காரணம் மனிதன் கடைபிடித்த நுகர்வுக் கலாச்சாரமே ஆகும். சுருங்கச் சொல்வதானால் "தீதும் நன்றும் பிறர்தர வாரா" எனும் வரிகள் மனித செயல்பாடுகளுக்கு மிகவும் பொருந்தும்.

**"மூன்றாம் உலகப்போர் நாவலாசிரியரின் படைப்பாளுமை"** என்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் தலைப்பாக அமைகின்றது. சுற்றுப்புறச் சூழலைக் காக்கவேண்டி, காலந்தோறும் பல்வேறு வழியில் அறிஞர்களும் சான்றோர்களும் கவிஞர்களும் கூறியவண்ணம் இருந்திருக்கின்றனர். அவ்வகையில் விருதுபெற்ற புதினமாகிய மூன்றாம் உலகப்போர் எனும் கவிப்பேரரசு வைரமுத்து அவாகளின் படைப்பில் இலங்குகின்ற படைப்பாளுமை குறித்து விவரிப்பதே இக்கட்டுரையின் ஆய்வுப் பொருண்மையாக எடுத்தாளப்பட்டுள்ளது. வேளாண் மற்றும் வேளாண் இடுபொருட்கள், வேளாண் விளை நிலங்கள், மண் வளம் ஆகியவற்றில் தனிமனித அரசியல் அதிகார வர்க்கங்கள் தங்களின் வல்லமையைக் காட்டத்தொடங்கியதன் விளைவு உழுதொழில் செய்வோர் தம் வாழ்வாதாரங்கள் அறவே தரைமட்டமாகிவிட்டது என்பதனை எழுத்தாயுதம் கொண்டு சொல்கிறார் கவிஞர் வைரமுத்து. அவர் தம் படைப்பான மூன்றாம் உலகப்போர் புதினத்தில் இயற்கை மீதான மனிதனின் அலட்சிய போக்கையும் அதனால் மண்ணும் மரங்களும் செடிகொடிகளும் அடைந்திருக்கக்கூடிய மாற்றங்களும் எண்ணிலடங்காதவை.

கருத்தமாயி சின்னபாண்டி, எமிலி, இஷிமூரா போன்றோர் கதைகளை நகர்த்துவதாகத் தோன்றாமல் வாழ்வை நகர்த்துகிறார்கள். அவ்வகையில் நாமும் சூழலியல் மீதான புரிதலை நன்முறையில் உறுதிப்படுத்தி செயல்பட்டால் வாழ்வும் வாழிடமும் வளம்பெறும் என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகவும் ஆய்வுச்சுருக்கமாகவும் அமைகின்றது.

**மூன்றாம் உலகப்போர்**

சிறந்த திரையிசைப்பாடல்களுக்காக நான்குமுறை தேசிய விருது பெற்றவரும், கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவரும் மிகச்சிறந்த கவிஞரும் ஆகிய கவிப்பேரரசு வைரமுத்து அவாகள், புவி வெப்பமாதல் குறித்து எழுதிய மூன்றாம் உலகப்போர் புதினம் மலேசியா டான்ஸ்ரீ சோமா அறக்கட்டளையால் உலகத்தமிழில் வெளியான சிறந்த நாவல் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாயிரம் அமெரிக்க டாலர் பரிசுத்தொகையும் பெற்ற சிறப்புக்குரியது. இந்நாவலுள் காணலாகும் ஆசிரியரின் படைப்பாளுமையை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

காதலை, வீரத்தை, ஈகையை, அன்பின் பரிணாமத்தை, இன்னபிற தளங்களில் பயணிக்கின்ற பிற நூல்களைப் போலல்லாமல் மிகவும் யதார்த்தமான நடப்பியலின் வெளிச்சத்தில் இவ்வண்டப்பெருவெளியினைக் கடக்க முயற்சிக்கும் சிந்தைகளாக இந்த மூன்றாம் உலகப்போர் புதினம் அமைந்திருக்கக் காண்கின்றோம். நின்று பேச நேரம் இல்லாது பரபரப்புக்கும் அவசரகதிக்கும் இடையே சிக்குண்டு வாழும் மனிதர்கள் தன்னியல்பை இழந்து வாழும் சூழல் நிலவுகின்றது. இயற்கை உணவுகளும், திடமான உடலமைப்பும் மண்வளமும் முன்பிருந்தவர்களைப் போல இல்லாது மாறிப்போனது என்பது காலத்தின் கேள்விக்குறியே ஆகும்.

> *“**சூழலியல்** (Ecology) என்பது, உயிர் வாழ்க்கையின் பரவல் பற்றியும், உயிரினங்களுக்கும் அவற்றின் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான இடைவினைகள் பற்றியும் அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் துறையாகும். ஒரு உயிரினத்தின் சூழல் என்பது சூரிய ஒளி, காலநிலை, நிலவியல் அம்சங்கள் போன்ற உயிரற்ற காரணிகளின் ஒட்டுமொத்த அளவான இயற்பியல் இயல்புகளையும், குறிப்பிட்ட வாழிடத்தில் வாழும் பிற உயிரினங்களைக் கொண்ட உயிர்சார் சூழல் மண்டலத்தையும் (ecosystem) உள்ளடக்கியதாகும்.”1*

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதிய மூன்றாம் உலகப்போர் புதினம் “இனிவரும் காலங்களில் மூன்றாம் உலகப்போர் மூளுமா? அப்படி மூண்டால் அது ஆயுத்தை முன்னிறுத்தி நிகழுமா? என்ற மையக்கருத்தை முன்னிறுத்துகின்றார். அவ்வகையில் தேசங்கள் அனைத்தும் போர்களின் பின்னே இனக்குழு சமுதாயங்களாகப் பிரிக்கப்பட்டன. ஆயுதங்கள் ஏந்தி ஒருவருக்கு ஒருவர் செய்யும் போர், மனிதனுக்கும் இயற்கைக்குமான போர், இயற்கைக்கும் மனிதனுக்குமான போர் எனப் போர் பலபிரிவில் பகுக்கப்பட்டுள்ளது எனினும் இவற்றுள் இழப்பு என்பது மனிதனுக்கே. தோற்கப் போவது மனிதகுலமே ஆகும். அத்தோல்வியை ஒப்புக்கொள்ள மனித சமூகம் முன்வரும் வரை புரிதலைஏற்படுத்த இயற்கை பல முன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. நிலத்தடி நீர் வற்றிப்போதல், மிதமழை, மண்ணின் இருக்கமில்லா தன்மை, மண் சரிவுகள், மேகப்பிளவு, கடல்கோள் , பெருஞ்சூறை போன்ற பல பேரின்னல்களைத் தந்து புரிதலை ஏற்படுத்த இயற்கை முற்படுகின்றது. அந்தப்புரிதலை தனக்கான நூல் பயின்றுவரும் கதாப்பாத்திரங்களின் வழி உணர்த்த முற்பட்டிருக்கின்றார் கவிஞர் வைரமுத்து.

**கதைச்சுருக்கம்**

புவி வெப்பமயமாதல், உலகமயமாதல் என்ற இரண்டுகாரணங்களால் தொடுக்கப்பட இருக்கும் போரா மூன்றாம் உலகப்போர் புதினத்தில் பலதரப்பட்ட கதாப்பாத்திரங்கள் வந்து போகவில்லை, கடந்து போகவும் இல்லை, மாறாக வாழ்ந்து போகின்றார்கள்.

மூன்றாம் உலகப்போர் புதினத்தில் வாழ்ந்து போகிறவர்களில் முதன்மை பாத்திரம் கருத்தமாயி. இவர் வேளாண்மையைப் பின்னணியாகக்கொண்ட இன்றைய இளைஞர்களின் தந்தையாக வருகின்றார். தேனி மாவட்டம் அட்டணம்பட்டி எனும் ஊரில் நகர்கின்றது கதை. கருத்தமாயிக்கு சிட்டம்மா என்ற மனைவி இருக்கிறாள். மண்ணுக்கே உரிய திமிர்தனமும் இழுத்த பேச்சும் சிட்டம்மா நினைவில் நிழலாடுகின்றாள். கருத்தமாயிக்கும் சிட்டம்மாவுக்கும் முத்துமணி, சின்னபாண்டி என்று இரு மகன்களும் இருக்க, இவர்களுள் வெற்றுப் பையனாக முத்துமணியும், சமூக அக்கரை கொண்ட நல்ல இளைஞனாக சின்னபாண்டியும் அமைந்து கதையில் ஊடாடுகின்றனர். அட்லாண்டா நகரத்து ஆய்வாளர் எமிலி, இஷிமூரா ஆகிய கதை மாந்தர்கள் இந்திய தேசத்தின் மீது நேசம் கொண்ட அயல்நாட்டு சிந்தனையாளர்களாக அமைகின்றனர். கருத்தமாயியின் கிணற்றுக்குள் கசிகின்ற சிவப்புநிற நீரினால் கிளம்புகின்றது சூழலியல் சிந்தனை. முத்துமணியின் தகாத சேர்க்கையின் காரணமாக தந்தையின் கோபத்திற்கு ஆளாகி வாழ்க்கையினை இழக்கின்றான். தனது தந்தை தாயின் நினைவாக மரங்களை நட்டு வணங்குகின்ற கருத்தமாயி சின்னபாண்டிக்கு ஒரு வாழ்வியல் நாயகனாகத் தெரிகின்றார். சிட்டம்மாவுக்கும் கருத்தமாயிக்கும் இடையே பேச்சுவார்த்தையில்லாது போயிடினும் சாடையாகத் திட்டுவதும் அன்பை மறைமுகமாக வெளிப்படுத்துவதும் வியப்புக்குரிய அழகாக அமைகின்றது.

பெற்ற பிள்ளைகள் பெற்றவர்களின் சொல்கேட்டு நடந்துவிட்டால் தனிக்குடும்ப நலம் நன்முறையில் பேணப்படும். அதற்கு விதிவிலக்காக கருத்தமாயியின் மூத்தமகன் முத்துமணி இழிந்த அரசியல் சவகாசம், பிறர்மனை நோக்கும் சிறுமைகுணம் போன்ற இழி ஒழுக்கங்களின் மொத்த உருவாக விளங்குவதாகக் காட்சிப்படுத்தியுள்ளார். இவ்வகை எதிர்மறை கதைப்பாத்திரங்கள் நேர்மறை கதைப்பாத்திரங்களின் மேன்மைத் தன்மையை மேலும் உயர்த்திக்காட்டவே அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன.

விதை மேலாண்மையில் முதுநிலைப்பட்டம் பயிலும் சின்னபாண்டிக்கும் அட்லாண்டா இளம் ஆய்வாளர் எமிலிக்கும் இடையே நிலவுகின்ற நட்பு கடந்த நேசம் சிட்டம்மாவுக்கும் கருத்தமாயியிக்கும் புரிந்துபோனது என்பது கதைக்கு மிக்க பக்கபலமாக அமைந்திருக்கின்றது. எமிலிபோல் கதையை அலங்கரிக்கும் இன்னுமொரு கதாப்பாத்திரம் இஷிமூரா சப்பானிய விஞ்ஞானம் பயின்ற பெற்றோரை இழந்த ஒரு அனுபவசாலியாக வந்துபோகிறார். சொல்வதென்றால் சின்னபாண்டிக்கு சூழலியல் மீதான விழிப்பை ஏற்படுத்தியவர் இவரே.

> *“ஏன் என்று கேட்பதே இங்கு கேலிக்கூத்தாக ஆகிவிட்டது. ஆட்டு மந்தைத்தனமே வாழ்க்கையின் வழி என்றாகி விட்டது. பணிவு நமக்குத் தவறாய்க் கற்றுத்தரப் பட்டிருக்கிறது. ஆண்டானே, நீ அடித்தாலும் உதைத்தாலும் மிதித்தாலும் நீயே கதி என்ற கண்மூடித்தனமே பணிவு என்று நம்பப்படுகின்றது. நம் பலம் நமக்கே புரியாததால் கயிற்றில் கட்டுண்ட யானைகளாகிப் போகிறோம் நாம். தினக்கூலி வேலை செய்பவர்களிடம் அறுபது ருபாய் எனக் கையெழுத்தை வாங்கிக் கொண்டு கூலியாய் நாற்பது ருபாய் கொடுப்பார் மேற்பார்வையாளர் இதை எதிர்க்கத் திராணியற்ற எதிர்க்க வேண்டும் என்பதையே அறியாத கூட்டம்- இது அவர்களது தொழில்முறை என்று இந்தச் சுரண்டலை ஏற்றுக்கொள்ளும்”*
> *(பார்வைகள், கனிமொழி, ப.31)*[2]

என்ற சமூக உண்மை நிலையினைப் புரிந்துகொள்ளும் பேராற்றல் சின்னபாண்டிக்கு இயல்பாகவே அமைந்திருக்கின்றது.

தனிமனிதப் பணம் கொண்டு சமூக சீர்திருத்தத்திற்குச் செலவழிப்பது நேரிய சிந்தனையல்ல. மக்களின் பங்களிப்பு இல்லாத எந்த முன்னெடுப்பும் மக்களைச் சென்று சேராது என்ற கருத்தை கதை வழியாக சிறுகச்சிறுக நகர்வதைக் காணமுடிகின்றது. நெகிழியை ஒழிக்கவும், குப்பைகளை எரிக்காத நற்சூழலும், குப்பைகளைத் தரம்பிரித்து அப்புறப்படுத்துகின்ற தன்மையும், துணிப்பையை நோக்கி மக்களை வரவழைக்கின்ற மன மாற்றமும் இயற்கை வளங்களின் மீட்டுருவாக்கம் பெறுகின்ற தன்மையும் கதையின் இறுதிக்கட்டமாக அமைகின்றது.

### பாத்திரப்படைப்புகள்

#### கருத்தமாயி

புதினத்தில் வலம்வரும் பல்வேறு பாத்திரங்களில் கருத்தமாயி ஆசிரியரால் அறிமுகப்படுத்தப்படுகின்றபோது “மண்ணைக் கிண்டுகின்ற சாதி” என்றே அறிமுகம் செயப்படுகின்றார். “சும்மா செக்குல ஆட்டுன எண்ணெய் எடுத்துச் சிவலிங்கத்துக்குப் பூசுன மாதிரி தேக்கங்கட்ட மாதிரி திரேகம். படிக்காதவர் என்பதனைச் சொல்லி கருத்தமாயி எழுத்தறிவில்லாதவர் என்று சொல்லாது “கிராமத்து ஆளுகளுக்கு ஆகாயமும் பூமாதேவியும் தான் பள்ளிக்கூடம்” என்று சொல்வதன்மூலம் கருத்தமாயி மிகுந்த அனுபவம் வாய்ந்தவர் என்பது தெளிவாகின்றது. எமதர்மனை கருத்தமாயி குறிப்பிடும் போது “எருமைகாரரு” என்று சொல்லி தேனி மாவட்ட வருசநாட்டுக்கு அருகிலான அட்டணம்பட்டி குறித்த வட்டார வழக்காறுகளை நம் கண்முன் நிழலாடச் செய்கின்றார்.

#### சிட்டம்மா

நேசநெஞ்சமாக கருத்தமாயியிக்குப் பக்கத்துணையாக ஏர்க்காட்டில் பின்னேராகப் பூட்டப்பட்டவள் சிட்டம்மா. சத்தமாகப் பேசும்படி படைக்கப்பட்டிருக்கின்றாள். கருத்த மாயியிடம் பேசாதபோது வீட்டில் தான் வளர்த்த ஆட்டுக்குட்டியிடம் பேசுவது போல சிட்டம்மா சாடை பேசுவது இரசிக்கத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஊதாரிப் பிள்ளையாக முத்துமணி படைக்கப்பட்டிருப்பினும் பெற்றமனம் பித்து என்பது போல சிட்டம்மா கசிந்து போகின்ற இளகிய மனத்தளாகப் படைக்கப்பட்டிருக்கின்றாள். கருத்தமாயியுடன் கிழங்குராணிக்கு ஏற்பட்ட பிடிவாதப்போர் தவறாகப் புரிதலை சிட்டம்மாவிடம் ஏற்படுத்திவிட்ட போதும் விட்டுவிலகாது மண்வெட்டியும் பூணும் போல இணைந்தே பிள்ளைகளை வளர்த்தெடுக்கின்ற நல்ல தாயாக விளங்குகின்றாள்.

> *“இயற்கைத் தோட்டத்தில் பெண் பூக்கள் பெருமைப்படுத்தப்படவில்லை. ஆண், பெண் கூட்டுறவில் சந்ததிகள் தொடர்ந்தாலும் பெண் என்பவள் பெற்றுத் தருகின்ற இயந்திரமாகவே கருதப்பட்டாள்”*
> *(புதுமைப்பெண் படைத்த புண்ணியன், சேயோன்,ப.130)* [3]

வெளிநாட்டில் இருந்து இந்தியா வந்து சிட்டம்மா வீட்டில் வந்து எமிலி தங்குவதாக ஏற்பாடாகிய போது பதறாமல் சிட்டம்மா வைத்த இரசம் எமிலியின் மனப்பேழைகளில் பதிவாகின்றன. அதாவது, சிட்டம்மா புளியைக் கரைப்பதும், சீரகம், மிளகு, பூண்டை ஆசிரியர் தன் மாணவர்களைத் தட்டுவது போல நசுக்கி அடுப்பில் கூட்டுவதும் , அவள் இட்ட கடுகு சட்டிக்குள் வெடித்து தீபாவளி கொண்டாடுவதாகவும் எறிகின்ற மல்லித் தழை ஆகியன சிட்டம்மா எவ்வாறு

இருந்திருப்பாள் என்ற தேடலில் தனக்குள் ஒளிந்ருந்த நம் பாட்டியும், அப்பத்தாவும், அவ்வாவும் நினைவில் வந்நு போகும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறாள் சிட்டம்மா. மொத்தில் சிட்டம்மா அட்டணம்பட்டி தேன்சிட்டு தான்.

**சின்னபாண்டி**

வேளாண் பல்கலைக்கழகத்தில் விதை மேலாண்மையியல் பட்டம் படிக்கும் முதுநிலை மாணாக்கனாக, கருத்தமாயி, சிட்டம்மா ஆகியோரின் நம்பிக்கை மிச்சமாகவும் விளங்குகின்றான் சின்னபாண்டி. சமூக மாற்றம் தனிமனிதனில் தொடங்குகின்றது என்ற தாரக மந்திரத்தை சின்னபாண்டி எமிலியிடமிருந்தும் இஷிமூராவிடம் இருந்தும் கற்றுக்கொள்கின்றான். ஒவ்வொரு பன்னிரெண்டு மணி நேரத்திற்கும் ஒரு விவசாயி இந்தியாவில் மரணிப்பதும் பறக்கின்ற பறவைகள் பொத்தென்று வீழ்ந்து இறப்பதும், மண்ணில் வாயு வெடிப்பதும் கண்டு பொங்கிய அட்டணம்பட்டி கருத்தமாயி பெற்றெடுத்த நன்முத்து. இயற்கை ஆர்வலனாக, பெற்றோர்க்கு நல்ல மகனாக, எமிலியை வர்ணிக்கும் நேசிக்கும் நல்ல கவிஞனாக, இஷிமூராவின் நல்ல நட்பாக, ஊரை நேசிக்கும் பண்பாளனாக வலம் வருகின்றான் சின்னபாண்டி ஆசிரியர் வைரமுத்துவின் சாயலில்.

> ''உழுக நிலம் இருக்கு
> ஒண்ட நிழல் இருக்கு
> எருமைத் தயிரு இருக்கு
> ஏண்டி போற ரங்கூனுக்கு''

என்னும் வரிகளால் சின்னபாண்டியின் எண்ணப்படி நாடும் நகரும் சிற்றூரும் வளம் பொருந்தியதாக இருந்தால் மக்கள் இடம்பெயரத் தேவையிராது. புலப்பெயர்வு என்பது நேராமல் இருக்கும் என்பது புலனாகின்றது.

**எமிலி**

வெளிநாட்டில் இருந்து இந்தியா வந்து காந்திகிராம பல்கலைக்கழக மாநாட்டுக்காக வந்திறங்கிய வேளாண் மற்றும் இயற்கை ஆய்வாளர் எமிலி. தோற்றத்தை வர்ணிக்க ஆசிரியர் முற்படுகையில் அவள் அழகை சின்னபாண்டியின் கண்கள் என்னும் புகைப்படக்கருவியைத் துணைக்கழைக்கின்றார். பூரணத்தில் ஊறிய நிலா அவள் முகம், கதவிடுக்கு வழியே சொர்க்கம் பார்க்கும் அனுபவம். சூரியகாந்திச் செடியில் இளநீர் காய்த்தது போன்ற அழகு.

> ''இடை சிறுத்ததால் தனம் பெருத்ததோ
> தனம் பெருத்ததால் இடை சிறுத்ததோ''

என்று சேக்ஸ்பியர் செயங்கொண்டான் ஆகியிருப்பான் இன்றிவளைக் கண்ணுற்றிருந்தாள் என வருணிக்கின்ற அழகில் எமிலி கூடுதலாய் ஒளிர்கின்றாள. மண்ணையும் விண்ணையும் நாம் பாதுகாக்காவிடில் புதைக்க ஆளற்றுப் போகும் தேசங்களை நம் காலங்கள் கடக்க நேரிடும் என்று எமிலி சொல்லும் பொழுது எமிலி என்னும் பாத்திரம் சிந்தையாலும் அறிவாலும அழகாகத் தெரிகின்றாள்.

**இஷிமூரா**

சப்பானில் பிறந்த விஞ்ஞானம் படித்த ஒரு விவசாயி மகன். அண்மைச் சுனாமியில் தாய்தந்தையை இழந்தவர். எமிலியோடு இந்தியா வந்த இயற்கை ஆர்வலர். கருத்தரங்க கட்டுரை வாசிப்பில் பல எதிர்கேள்விகள் வந்தபோது என் மொழியில் பிழை இருக்கலாம் ஆனால் என் கருத்தில் பிழை இல்லை என்று சொல்லும் அளவுக்கு யதார்த்தமானவர். இரவோடும் பிரபஞ்சத்தோடும் பேசும் மண்ணுலக விசுவாசி.

இஷுமூராவின் தந்தை மசாமி என்பது ஆசாமி என்றும் தாய் காமியாமா என்பது மாமியா என்று கருத்தமாயி அவர்களின் வாயில் உச்சரிக்கின்ற போது அவற்றை இரசித்து ஏற்றுக்கொள்கின்ற மாண்பு இஷுமூராவை அழகாகக்காட்டுகின்றது. இறந்த தாய் தந்தை தாய்க்கு என்று இரண்டு மரங்களை நட்டு இஷிமூராவையும் வணங்கிக்கொள்ளும்படி சொல்கின்ற கருத்தமாயியின் வார்த்தைகள் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

> *“மனம் தூயதாயின் சாந்தி மலர்ச்சி பெறுகின்றது. சாந்தியா மனக்கொதிப்பு அடங்குகின்றது. மனக்கொதிப்பு அடங்கப்பெற்றால் மனம் உள் முகப்படுகிறது. உள்முகம் பட்ட மனது, புத்தி, சித்தம், அகங்காரம் என ஒன்றில் ஒன்று ஓய்ந்து முடிவில் ஆத்மாவில் ஓய்வு கொள்கிறது. உப்புப் பொம்மை தானே இறங்கி கடலில் கரைந்து கதையாகிறது. அந்தக்கரணம் என்ற உட்புலன்கள் ஆத்மாவில் கரைய ஆத்மா மட்டுமே மிகுந்து துலக்கமுறுகிறது. இதுவே ஜீவனின் முடிந்த நிலை”*
> *(யோக வசிஷ்டம், சிவராமகிருஷ்ண சர்மா, ப.150)* [4]

**பிற பாத்திரங்கள்**

*கருத்தமாயியின் அண்ணன் சுழியன், சீனிச்சாமி, உத்தம்சிங், பண்ணைக்காரன், கனகராணி, பவளாங்கி என்று பல பாத்திரங்கள் மூன்றாம் உலகப்போர் புதினத்தில் இடம்பெற்றிருக்கின்றனர். இவர்களில் சிலர் நேர்மறையானவர்களாவும் சிலர் எதிர்மறையானவர்களாகவும் படைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் எதிர்மறை பாத்திரங்களும் உயரிய சிந்தனையை நிலைநிறுத்தவே அல்லது முன்னிறுத்தவே என்று எண்ணத்தோன்றுகின்றது. இவர்களின் வழியாக ஆசிரியர், இன்றைய கிராமங்கள் சாராயத்திலும் தொலைக்காட்சியிலும் இலவசத்திலும் சிக்கிக்கொண்டிருக்கின்றது என்று கூறுகின்றார். இன்று கூடுதலாக அலைபேசி மக்களைத் தின்றுக் கொண்டிருக்கின்றது.’ஒரு விவசாயிக்கு அவன் விளைநிலம் வெறும் இடம் அல்ல அது அவனின் அடையாளம். அவன் வாழ்வின் பிடிமானம். கடன் வாங்கி விவசாயம் செய்யலாம் என்றாலும் வேலை செய்ய ஆள் கிடைக்காது என்றெண்ணும் போது நூறுநாள் வேலையில் மக்கள் சிந்துகின்ற நாடகக் கண்ணீர் நடைமுறையை நகைப்புடன் காட்டகின்ற பாத்திரங்கள் இப்புதினத்தில் இடம்பெறுகின்றன.*

*இந்த ஆய்வுக் கட்டுரையின் நிறைவாக, நீங்காத மாண்பு கொண்ட இந்திய திருநாட்டின் முதுகெலும்பு என சிறப்பிக்கப்பட்ட விவசாயமும் அதன்வழி வழங்கி வந்த பசுமைப்புரட்சி பால்புரட்சி போன்றவற்றால் தன்னிறைவுப் பொருளாதாரம் என்ற* நிலையை எட்டுவதற்கு நாம் எல்லோரும் முனைப்புடன் முன்வருதல் வேண்டும். *உலகமயமாக்கலும் அதன் வழி மேம்படுத்த முயல்கின்ற தொழிற்புரட்சியும் நாட்டின் உலகின் சூழலியல் அமைப்புகளைச் சிதைக்காத வகையில் அமைய வேண்டும்* என்பதில் உறுப்பாடு கொள்தல் வேண்டும். அவசியத் தேவைகளுக்கு அல்லாத ஆடம்பரத் தேவைகளுக்கு எபொருளை வீணடிப்பதும் மண்வள ஆதாரங்களை அதிகமாக நுகர்வதும் குறைத்துக்கொள்ள பழகவேண்டும். பொறியியல் படித்து, முனைவர் பட்டம் வென்று பிணவறை காவலர் தேர்வுக்கு வரிசைக்கட்டி நிற்கும் இளைஞர்கள் தங்களின் மனப்போக்கை மாற்ற வேண்டும். உழவுக்களம் நோக்கி நடைபோட வேண்டும். தனிமனித மன மாற்றம் நிகழாத வரையிலும் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு பிறக்கப் போவதில்லை. எனவே நாம் வாழும் ஊர், நாடு, நகரம், உலகம், பிரபஞ்சம் ஆகிய இவற்றுள் வாழ்வதற்கு நமக்கு எந்த அளவு

உரிமையுண்டோ அதே அளவு நம் அடுத்த சந்ததியினர்க்கும் உரிமை உண்டு என்பதை உணர்ந்து செயல்படுவோம். தனிமனித நடத்தை மாற்றமே சூழலியல் மேம்பாடுக்கு வழிவகுக்கும் என்ற உயரிய கருத்தை கவிஞர் வைரமுத்து எழுதிய மூன்றாம் உலகப்போர் புதினம் உணர்த்துகின்றது என்பது இந்த ஆய்வின் உறுதிப்பாடாக அமைகின்றது.

## துணை நூல்கள்

*1.* சூழலியல் – தமிழ் விக்கிப்பீடியா விளக்கம்
https://ta.wikipedia.org

*2.* கனிமொழி
பார்வைகள்
வ.வு.சி நூலகம்
ஈடென்டேல் அப்பார்மெண்ட், *1 B* முதல் தளம்,
*7,* பிஷப் வாலர்ஸ் அவென்யூ
மயிலை, சென்னை-*600004 (2012)*

*3.* சேயோன்
புதுமைப்பெண் படைத்த புண்ணியன்
*T – 6* மகாலட்சுமி
*80-82* நட்டு சுப்பராயன் தெரு
மயிலாப்பூர்
சென்னை – *4*